**புத்தளம் நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புத்தளம் நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தளம் நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 70,710,468 தொகையான ஏனைய கடன்பட்டோர் பெறுமதி தொடர்பான பெறுவனவுகள் மற்றும் கடன்பட்டோருக்கான ஏற்பாடுகளுக்காக கணக்கிணக்கம் செய்து மிகை அல்லது பற்றாக்குறை ஏற்பாடுகளை இனங்கண்டு அவற்றை கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இற்கு முன்னைய கடன்பட்டோர் பெறுமதி தொடர்பாக செம்மையாக்கல் செய்வதற்காக தேவையான தகவல்கள் பரீட்சிக்கப்பட்டு வருகின்றன. சம்பளங்களை மீளளிப்புச் செய்தல் சம்பந்தமாக உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் பிரதம செயலாளருக்கு வேண்டுதல் விடுக்கப் பட்டுள்ளதுடன் பண மீளளிப்பு கிடைத்த உடன் அப்பணம் விடுவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ள துடன் பின்னர் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் பிணை வைப்புக் கணக்கிற்கும் ஊழியர் பிணை முதலீட்டு கணக்கிற்குமிடையே ரூபா 36,108 வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசத்தை சரியாக இனங்கண்டு 2021 இறுதிக் கணக்கின் போது செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்குகளின் பிரகாரம் இருப்பு (காகிதாகிகள், வீதி விளக்கு உபகரணங்கள் முதலிய இருப்பு) ரூபா 20,192,385 ஆக இருந்ததுடன் இருப்பினை பௌதீக ரீதியாக கணித்து கணக்குகளில் செம்மையாக்குதல் செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டிலிருந்து இறுதி இருப்பினை பௌதீக ரீதியாக கணித்து கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பௌதீக இருப்பினை கணித்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி நகர சபைக்குச் சொந்தமான களஞ்சியம் தீப்பிடித்து அழிவடைந்த ரூபா 2,433,668 தொகையான இருப்பின் இருப்பு நட்டம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அழிவடைந்த இருப்பின் நட்டத்தை 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கைத் தயாரிக்கும் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியதுடன் இருப்பு நட்டத்தை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏனைய செலவுக் கடன்கொடுத்தோர் பெறுமதியில் முன்னைய ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டு தொடர்பான ரூபா 31,091,243 பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட குறைவான மற்றும் மிகையான ஒதுக்கீடுகளின் பெறுமதியை (கடன்கொடுத்தோர் ஒதுக்கீடுகளுக்கும் உள்ளபடியான கொடுப்பனவுக்கு மிடையேயான வித்தியாசம்) இனங்கண்டு கணக்குகளில் தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | தகவல்கள் கிடைத்துக் கொண்டு இருப்பதுடன் 2021 இறுதிக் கணக்கினைத் தயாரிக்கும் போது செம்மையாக்குவதற்கும் நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 26 கட்டிடங்கள் மற்றும் நிர்மாண விடயங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்காக நில அளவையாளர் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | விரைவாக மதிப்பீடு செய்து சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | நகர சபையினால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள 03 வழக்குகள் சம்பந்தமாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்காததுடன் | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது இது சம்பந்தமான தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வழக்கு சம்பந்தமாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இந்த 03 வழக்குகள் சம்பந்தமாக இன்று வரை ரூபா 542,000 செலவு செய்யப்பட்டுள்ளது. | | |
| (ஏ) | எல்பா வியாபார கட்டிடத் தொகுதியினை நிர்மாணிப்பது தொடர்பாக ஆலோசனைக் கம்பனிக்கும் ஒப்பந்தகாரருக்கும் செலுத்தப்பட்ட ரூபா 203,778,441 பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே வியாபார கட்டிடத் தொகுதியை கடைகளாகப் பிரிப்பதற்காக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஒரே தடவையில் கிடைத்த (Key Money) முறையே ரூபா 98,271,601 மற்றும் ரூபா 11,050,000 பணத்தை இனங்காணும் நடைமுறைக்கு இணங்க ஒவ்வொரு ஆண்டின் வருமானமாக இனங்கண்டு பணம் கிடைத்த ஆண்டில் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மூலதனமாக்கப்படாத செலவுகளை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். பெற்றுக்கொண்ட மற்றும் பெற வேண்டிய பணம் சம்பந்தமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது கலந்தாலோசித்து தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் ஏனைய குறைபாடுகளை 2021 ஆம் ஆண்டிலிருந்து நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். மேலும் வியாபார கடன்கொடுத்தோருக்கு எதிர்காலத்தில் உடன்படிக்கைகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆண்டிற்கான வருமானம் செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். மேலும் அனைத்து நிபந்தனைகளையும் உள்ளடக்கி உடன்படிக்கை செய்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் படியான பெறுமதிக்கும் பட்டோலை அறிக்கையின் படியான பெறுமதிக்குமிடையே ரூபா 508,761 வித்தியாசம் காணப்பட்டது. | பட்டோலையின் படியான வித்தியாசத்திற்கான காரணத்துக்கான விடயங்களை ஆராய்ந்து பார்த்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்களை சமர்ப்பிக்காமையின் காரணமாக ரூபா 121,442,913 கூட்டுமொத்தமான 13 கணக்கு விடயங்களை திருப்தியாகப் பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | தேவையான ஆவணங்களையும் அறிக்கைகளையும் உத்தியோகத்தர் களினூடாகப் பெற்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிக் கூற்றுக்களில் தரப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகளை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 12,322,452 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 145,727,308 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும் | | |
| மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வீதவரிப் பணத்தில் ரூபா 15,764,000 பணம் அறவிட வேண்டியிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் ஒட்டுமொத்த வரி நிலுவை ரூபா 91,841,929 ஆகும். மேலும் 2018 இலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை அங்கீகரித்த கட்டிடங்களுக்காக வருடாந்த வீத வரியினைத் திருத்தம் செய்யாது குறைந்த பெறுமதி அறவிடப்பட்டு வந்தது. | அனைத்து சிக்கல்களும் நிலை கொண்டிருந்தும் ரூபா 7,109,000 பணம் சேகரிக்கப்பட்டதுடன் மட்டுப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதனால் நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய முடியாதிருந்தது. மேலும் கட்டிடங்களுக்காக மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்து அப்பெறுமதி வழங்கப்பட்டதன் பின்னர் உரிய பெறுமதியை அறவீடு செய்வேன். | சரியான மதிப்பீட்டின் அடிப்படையில் நிலுவையான வீத வரியினை விரைவாக அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) ஏனைய வருமானங்கள் | | |
| நிலுவையாக இருந்த ஏனைய வருமானமான பட்டோலைகளின் பிரகாரம் முத்திரை வருமானமாக ரூபா 2,154,128 தொகையும் கடை வாடகையாக ரூபா 5,429,663 தொகையும் கேள்வி வருமானமாக ரூபா 1,029,527 தொகையும் நீதிமன்ற தண்டப் பணமாக ரூபா 729,185 தொகையும் நாளாந்த சந்தை கட்டணமாக ரூபா 2,899,600 | நிலுவையான முத்திரைக் கட்டண பணம் சபையினால் அறவிட வேண்டிய பணம் அல்ல என தெரிவிக்கின்றேன். நிலுவையான கடை வாடகையானது கடந்த காலம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்தி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் | சரியாகவும் நாளதுவரையாகவும் ஆவணங்களைப் பேண வேண்டியதுடன் நிலுவையாக உள்ள ஏனைய வருமானங்களை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகையுமாக ரூபா 12,242,103 மொத்த தொகை 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற நிலுவைகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். கேள்வி வருமானத்தை இன்னும் ஆவணங்கைள தேடிப் பார்த்து தேவையான பதிவழித்தல்களைச் செய்வதற்கு அல்லது அறவீடு செய்வதற்கு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். நீதிமன்ற தண்டப்பணம் சபைக்கு கிடைக்கவில்லை எனவும் எதிர்காலத்தில் இப்பணத்தை நீக்குவதற்கு தேவையான அங்கீகாரத்தினைப் பெற்று மீதியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். நீண்டகாலமாக இறுதிக் கணக்கில் காட்டப்பட்ட நாளாந்த சந்தைக் கட்டண நிலுவைப் பணம் சம்பந்தமாக ஆவணங்களைத் தேடிப் பார்ப்பதில் சிக்கல்கள் காணப்படுகின்றன எனவும் எவ்வாறாயினும் இன்னும் அந்த ஆவணங்களை தேடிப் பார்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விசேட முற்பணமாக வழங்கப்பட்டு 15 ஆண்டுகளை மிகைத்த ரூபா 223,656 தொகையான முற்பணங்களை செலுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இம்முற்பணங்களைப் பதிவழிப்பதற்காக பொதுச் சபைக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள துடன் அதன் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன். | நிலுவையான முற்பணங்களை விரைவாக அறவீடு செய்தல் வேண்டும். |

## 3.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து பெறுமதிசேர் வரியிலிருந்து நகர சபை விடுவிக்கப்பட்டிருந்ததனால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இன்னும் எதிரீடு செய்ய முடியாதிருந்த பெறுமதி சேர் வரிக் கணக்கிலுள்ள ரூபா 7,365,831 வரவு மீதி சம்பந்தமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெற்று தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஏப்ரல் 28 ஆந் திகதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டவாறு விடயத்தை கலந்தாலோசித்து தேவைப்பட்டவாறு நடவடிக்கை எடுப்பேன். | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டு தேவையான தீர்த்து வைத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபைக்குச் சொந்தமான காணியில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஒரு உணவகத்தை நிர்மாணிப்பதற்காக ஒரு கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட துடன் அதற்காக நகர சபையினால் நீர் தாங்கிக்காக ஒரு கோபுரத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 863,051 செலவு செய்யப்பட்டிருந்தது. அக்கட்டிடத்தை நகர சபையினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தமைக்கு எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் கணக்காய்வுத் திகதி வரை இக்கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது. அவ்வாறே நிர்மாணிக்கப்பட்ட நீர் தாங்கியும் விளைவற்றுக் காணப்பட்டது. | அண்மையில் அந்த உணவக கட்டிடத்தையும் அது அமைந்துள்ள காணியையும் புத்தளம் நகர சபையினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே நீர் தாங்கியையும் நிறுவி அச்செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உரிய கட்டிடத்தை நகர சபையினால் பொறுப்பேற்று வருமானம் உழைக்கும் செயற்பாட்டிற்காக செயற்திறனாக ஈடுபடுத்துதல் வேண்டும். |